# Tirumular – திருமூலர்

திருமூலர் அல்லது திருமூல நாயனார் சேக்கிழார் சுவாமிகளால் புகழ்ந்து பேசப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் , பதினெண் சித்தர்களுள் ஒருவரும் ஆவார். இவர் சிறந்த ஞானியாய் விளங்கியவர். திருமூலர் வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் சுருக்கமாய்க் கூறுகிறார். இவர் வாழ்ந்த காலம் பொ.ஊ.மு. 5000 வருடங்களுக்கு முந்தயது எனினும் இவரால் அருளப்பட்ட திருமந்திரமாலை பல காலத்திற்கு பின்னரே உலகிற்கு வழங்கப்பட்டது என்பதால் தற்கால அறிஞர்கள் பொ.ஊ. என்று கூறுகின்றனர். இது 3000 பாடல்களைக் கொண்டது. இதனைச் சைவத்திருமுறை பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாய்த் தொகுத்துள்ளனர்.

## திருமூல சித்தர்

திருமூலர் பெயரில் 12-இக்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. அவை பொ.ஊ. 16-ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. இவர் திருமூலர் அல்லர். திருமூல சித்தர். வைத்தியம், யோகம், ஞானம் முதலான பொருள்கள் பற்றியவை அவை. திருமூலர் திருமந்திரம் கலிவிருத்தம் என்னும் யாப்பினால் ஆன நூல். பிற்காலத்தில் கலிவிருத்த யாப்பில் தோன்றிய நூல்கள் பலவற்றிற்குத் திருமூலர் பெயரைச் சேர்த்துவிட்டனர். இப்படி உருவான ஒரு புலவரின் பெயர்தான் திருமூல சித்தர்.

- பன்னிரு திருமுறையில் பத்தாவது திருமுறையாகத் திகழும் சிறப்புடைய நூல் திருமந்ததிரம்.
- இது ஒன்பது தந்திரங்களை உடையது . ஒவ்வொரு தந்திரமும் பல அதிகாரங்களைக் கொண்டது. இதில் மொத்தம் 3000 பாடல்கள் உள்ளன.
- இதனை இயற்றியவர் திருமூலர்.
- நாயன்மார்கள் எல்லாரினும் காலத்தால் முற்பட்டவர் இவரே. இவர் ஒரு பெருஞ்சித்தர். நந்திதேவரின் மாணவர்.
- திருவாவடு துறைக்கோவிலில் உள்ள அரசமரத்தடியில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு யோகத்தில் அமர்ந்திருந்தார் என்றும் ஆண்டுகளுக்கு


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

ஒருமுறை விழித்து ஒவ்வொரு மந்திரமாக 3000 மந்திரங்கள் அருளினார் என்றும் கூறுவார்.

- திருமந்திரமே முதல் மந்திர நூலாகும் இதுவே பிற்காலச் சைவ சித்தாந்த . சாத்திரநூல்களுக்கு வேராக விளங்குகிறது.

| |
|---|
| அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்<br>அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்<br>அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்<br>அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"<br>என்ற பாடல் அன்பே சிவம், சிவமே அன்பு இரண்டும் ஒன்றே என்று கூறுகிறது. |
| ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"<br>"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"<br>ஆர்க்கும் இடுமின் அவரிவரி என்னன்மின்"<br>உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"<br>என்று திருமூலரால் கூறப்படும் உண்மைகள் அனைவரும் கடைப்பிடிப்பதற்குரிய அறிவுரைகளாகும். |

குறிப்பு :

- திருஞான சம்பந்தரர் , திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் மூவர் முதலிகள் எனப்படுவர்
- திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் நால்வரையும் சமக்குரவர் என்று அழைப்பர்.


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in